இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 26-11-2024

# பிடிவாரண்டுக்குப் பின்னால்..

அகப்பட்டுக் கொண்டார் அதானி!

அமெரிக்காவின் பங்குச்சந்தை பாதுகாப்பு அமைப்பான பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம், நியூயார்க் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தொடர்ந்திருந்தது. அதானி உள்ளிட்ட ஏழு பேர் மீது இவ்வழக்கு பாய்ந்துள்ளது. இதனை வைத்து அதானிக்கு பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட ஒரு தொழிலதிபராக அவர் இருந்தால் இதனை தனிப்பட்ட பிரச்சினையாகக் கூட பார்க்கலாம். ஆனால் 'அதானி' என்ற பெயர்ச் சொல், மோடி என்ற பெயர்ச் சொல்லோடு தொடர்புடையது என்பது சாதாரணப் பொதுமக்கள் வரை தெரிந்தது ஆகும்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று ராகுல் காந்தி இது தொடர்பாக கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பேசி வருகிறார்.

**"2014 ஆம் ஆண்டு 8 பில்லியன் டாலராக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இப்போது 140 பில்லியன் டாலராக ஆனது எப்படி? 2014 ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 609 ஆவது இடத்தில் இருந்தவர், 2022 ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தை பிடித்தது எப்படி?**

**விமான நிலையம் என்றாலும் அதானிதான். துறைமுகம் என்றாலும் அதானிதான். முன் அனுபவம் இல்லாதவர்கள் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்ற விதியைத் திருத்தினார்கள். அதானிக்கு 6 விமான நிலையங்கள் தரப்பட்டன.**

**இஸ்ரேலுக்கு பிரதமர் செல்கிறார். அவருக்குப் பின்னாலேயே நடந்து அதானி செல்கிறார். உடனே இஸ்ரேல் இந்தியா இடையிலான அனைத்து தொழில்துறை ஒப்பந்தங்களும் அதானிக்கு வந்து விடுகிறது. இதே போன்று ஆஸ்திரேலியாவுக்கு பிரதமர் செல்கிறார். உடனே மாயமந்திரமாக எஸ்.பி.ஐ. வங்கி அதானிக்கு 1 பில்லியன் டாலர் கடன் வழங்குகிறது.**

**வங்கதேசத்திற்கு மோடி முதல் முறையாக செல்கிறார். அங்கு மின்விநியோகத்திற்கான திட்டம் முடிவாகிறது. சில நாட்களுக்கு பின் வங்கதேசத்தின் மின்வாரியம் 25 ஆண்டுகளுக்கு மின் விநியோக உரிமையை அதானிக்கு வழங்குகிறது. 1500 மெகாவாட் மின்சார ஒப்பந்தம் அதானிக்கு கிடைக்கிறது. இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை"** – என்று சொல்லி வருகிறார் ராகுல் காந்தி. தனது பாதயாத்திரையில், 'அதானியைப் பற்றித்தான் அனைவரும் விசாரிக்கிறார்கள்' என்றும் ராகுல் சொன்னார்.

07.02.2023 அன்று அதானியும் மோடியும் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி நாடாளுமன்றத்தில் ராகுல் கடுமையாக விமர்சித்தார். ஆனால் அதற்கு நாடாளுமன்றத்திலோ, பொதுவெளியிலோ பிரதமர் நரேந்திர மோடி பதில் அளிக்காமல் தவிர்த்து வந்தார். கடந்த மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் கடைசியில் (மே மாதத்தில்) அதானியைப் பற்றி மோடி திடீரென்று பேசினார்.

தெலுங்கானா மாநிலத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி "பல ஆண்டுகளாக காங்கிரஸ் இளவரசர் 5 தொழிலதிபர்களைப் பற்றி பேசினார். பின்னர் அவர் அம்பானி, அதானி பற்றி மட்டும் பேசத் தொடங்கினார், இப்போது அவர்கள் பற்றியும் பேசாமல் திடீர் மவுனம் காத்து வருகிறார். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து ராகுல் காந்தி மற்றும் மற்ற காங்கிரஸ் தலைவர்கள் அம்பானி மற்றும் அதானி பற்றி அவதூறு பேசுவதை நிறுத்தி விட்டனர். ஏன்? நான் காங்கிரஸ் இளவரசரிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அம்பானி, அதானியிடமிருந்து நீங்கள் எவ்வளவு பணம் பெற்றீர்கள்? நடைபெறும் தேர்தலுக்காக அவர்களிடமிருந்து காங்கிரஸ் கட்சி எவ்வளவு நிதி பெற்றது. எத்தனை வாகனங்களில் பணத்தைப் பெற்றது? ஏதோ ஒன்று நடந்திருப்பதாக நான் உணர்கிறேன். இதுகுறித்து காங்கிரஸ் கட்சி தேசத்துக்கு விளக்கம் அளிக்க வேண்டும்" என்று பேசினார். இது பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டது என்பதைப் போல இருந்தது.

அதானி மீதான குற்றச்சாட்டுகளுக்கு வெளிப்படையான விசாரணை வேண்டும் என்று சொல்லப்பட்ட போதெல்லாம் மவுனம் சாதித்தார் பிரதமர்.

அதானி குழுமம் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க வேண்டும் என்று சொன்ன போது அதற்கு செவி சாய்க்கவில்லை. அதானி மீதான குற்றச்சாட்டுகளை 'செபி' விசாரிக்கும் என்றார்கள். 'செபி' விசாரிக்கலாம் என்று உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்தது. அதானி மீதான குற்றச்சாட்டுகளை செபி விசாரித்தது. எந்தத் தவறும் அதானி செய்யவில்லை என்று செபியும் சொல்லி விட்டது.

இந்த நிலையில் தான் அமெரிக்காவில் இருந்து பூதம் கிளம்பி உள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பு, அயலுறவு, ஊழல் தடுப்பு சட்டங்களைமீறி ரூ.6,300 கோடி அளவுக்கு மோசடிகள் செய்யப்பட்டதாகவும், அதற்காக இந்திய அதிகாரிகளுக்கு 2,029 கோடி ரூபாய் அளவுக்கு லஞ்சம் கொடுத்திருப்பதாகவும் அமெரிக்க நீதிமன்றம் சொல்லி இருக்கிறது. முதலீடுகளைத் திரட்டுவதற்காக லஞ்சம் தரப்பட்டதாகவும் சொல்லப் பட்டுள்ளது. பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது அதானிக்கு. இக்குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அதானி குழுமம் மறுத்துள்ளது. 'குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை நாங்கள் நிரபராதிகள்தான்' என்கிறது அவர்களது அறிக்கை. இந்த விளக்க அறிக்கை எல்லாம் போதாது.

**அதானி குழுமம் என்பது பா.ஜ.க. தலைமையுடன் தொடர்பு படுத்திப் பேசப்படும் நிறுவனம் என்பதால் இந்தியாவுக்கே அவமானமான செய்தியாக இது இருக்கிறது. 'ஒரு தனிநபரின் சட்டப் பிரச்சினைக்கும் நாட்டின் பொதுநலனுக்கும் இடையே தெளிவான எல்லையை வகுக்க வேண்டும்" என்று 'தி டிரிப்யூன்' ஏட்டின் ஆசிரியர் ஹரீஷ் காரே சொல்லி இருக்கிறார். அதானி விவகாரத்தை பா.ஜ.க.வில் இருந்து பிரிக்க முடியுமா?**

●●

---

கழகத்தினர் - இளைஞர் அணியினர் - பொதுமக்கள் அனைவரும் நாளை 'குறிஞ்சி' முகாம் அலுவலகத்தில் கூடி

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை வாழ்த்தி மகிழ்வோம்!

## பிறந்த நாளையொட்டி கழக இளைஞர் அணி அறிக்கை!

**சென்னை, நவ. 26 –**

**"கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நாளை 'குறிஞ்சி' முகாம் இல்லத்தில் கூடி 48-ஆவது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்வோம்" என்று கழக இளைஞர் அணி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.**

கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது 48வது பிறந்தநாளை முன்னிட்டு, `குறிஞ்சி' இல்லத்தில் தொண்டர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார் என்று கழக இளைஞர் அணி அறிவிப்பு விடுத்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழா வருகின்ற நவம்பர் 27 அன்று தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.

முதலமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கும் துணையாக, துணை முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, வரும் பிறந்தநாள் என்பதால், தொண்டர்களும் இளைஞர் அணியினரும் நலத்திட்ட உதவிகள் முதல் இரத்த தான முகாம்கள் வரை பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர் அணிச் செயலாளரின் பிறந்த நாளை உற்சாகமாகக் கொண்டாடி வருகிறார்கள்.



### வலுவாகக் கட்டமைத்து வழிநடத்தி வருகிறார்!

2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, கழகத்தினரின் வேண்டுகோளின்படியும் தலைமைக் கழகத்தின் முடிவின்படியும் கழகத் தலைவர் அவர்களின் நம்பிக்கையைப் பெற்று, அதே ஆண்டு ஜூலை 4 அன்று மாநில இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றார், நம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வகித்த பொறுப்பு என்பதை மனதிலேந்திப் பணியைத் தொடங்கிய அவர், இளைஞர் அணியை ஆற்றல் குன்றாமல் கழகத்தின் பாசறையாக வலுவாகக் கட்டமைத்து வழிநடத்தி வருகிறார்.

25 லட்சம் புதிய இளைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தது, இளைஞர் அணி உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தியது, அரசியலுக்கு அப்பாற்பட்டு, கைவிடப்பட்ட நீர் நிலைகளைத் தூர்வாரும் பணிகளை முன்னின்று நடத்தியது; குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டம்; நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம், இந்தித் திணிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என களத்திலும் தொய்வின்றிச் செயலாற்றி வருகிறது இளைஞர் அணி.

குறிப்பாக, 2007இல் இன்றைய கழகத்தலைவரால் நெல்லையில் நடைபெற்ற இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டின் தொடர்ச்சியாக, 2024இல் சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டை சேலத்தில் எழுச்சியுடன் நடத்திக் காட்டினார் .

இளைஞர்களுக்கு கழகக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கும் வகையில், தொகுதிதோறும் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டம், வாசிப்பை விரிவுபடுத்த சட்டமன்றத் தொகுதிகள் தோறும் `கலைஞர் நூலகம்', `முரசொலி பாசறைப் பக்கம்', `முத்தமிழறிஞர் பதிப்பகம்' என்று ஏராளமான பணிகளை முன்னெடுத்திருக்கிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

### 182 பேச்சாளர்கள் தேர்வாக வழி வகுத்தார்!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் இட்ட ஆணையை ஏற்று கழகத்திற்கு 182 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து கொடுத்தது மட்டுமல்லாமல் அந்த 182 பேச்சாளர்களும் கழகக் கொள்கைகளைத் திசைகள்தோறும் மக்களிடம் கொண்டுசெல்லும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்துவது, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தலைமையிலான கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பூர்வ செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு ஆயத்தமாகிக் கொண்டு வருகிறது கழக இளைஞர் அணி.

ஒரு புறம் இளைஞர் அணி பணிகள் என்றால், இதற்கு கொஞ்சமும் சளைக்காமல் துணை முதலமைச்சராக மிகச்சிறப்பாக செயலாற்றி வருகிறார், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

### குறிஞ்சி இல்லத்தில் தொண்டர்களுடன் சந்திப்பு!

திராவிட மாடல் அரசில் துணை முதலமைச்சராகப் பணிகளைத் தொடங்கிய பிறகு. தொடர் ஆய்வுகள், பல்வேறு புதிய திட்டங்கள், மழை வெள்ள நிவாரணப் பணிகள் என அரசு சார்ந்த பணிகளையும் ஓய்வில்லாமல் கவனித்து வருகிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.



இந்நிலையில் எளியவர்களின் எழுச்சியையே தனது எழுச்சியாகக் கருதி நாளும் உழைத்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பிறந்தநாளான 27ஆம் தேதி தனது `குறிஞ்சி' இல்லத்தில் தொண்டர்களைச் சந்திக்கவுள்ளார்.

உரிய பாதுகாப்பு வசதிகளுடன் காலை 9.30 மணிக்குத் தொடங்கும் வாழ்த்துப்பெறும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு தலைமையில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குன்றாமல், இந்நிகழ்வில் தொண்டர்கள் அனைவரும் பங்கேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளருக்கு உங்கள் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவிக்கலாம்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கும் கழகத் தொண்டர்கள், இளைஞர் அணியினர், பொதுமக்கள் அனைவரும் வரும் 27ஆம் தேதி `குறிஞ்சி முகாம்' அலுவலகத்தில் கூடி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் 48வது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்வோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# முத்தமிழ்ப் பேரவை, மொழி - கலையைக் காக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

வேண்டுகோள் அல்ல, ஒரு கட்டளையை இந்த அமைப்புக்கு நான் பிறப்பித்தேன். அதை மனமுவந்து நம்முடைய அமிர்தம் அவர்கள் ஏற்றுக் கொண்டு இந்த ஆண்டே அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார். அதற்காக முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு 'கலைஞர் விருது' முதன் முதலாக இந்த அமைப்பின் சார்பில் தரப்படுவது யாருக்கு என்று கேட்டால், புரட்சித் தமிழன் நம்முடைய சத்யராஜ் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனென்றால் மிக மிகத் தகுதி வாய்ந்தவருக்கு அந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார், "அதைப் பெறுவதில் நான் பெருமைப்படுகிறேன்" என்று! உங்களுக்கு வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன் அதுதான் உண்மை.

கலைஞரின் கனல் தெறிக்கும் வசனங்களைப் பேசி நடித்தவர். தந்தை பெரியாராகவே வாழ்ந்து காட்டியவர். எனவே, அவருக்கு வழங்கப்பட்டிருக் கிறது. கலையுலகத்தில் இருந்து கொண்டே தன்னுடைய பகுத்தறிவு உணர்வை சுயமரியாதை எண்ணத்தை திராவிடக் கொள்கைகளை மறைக்காமல் எதைப்பற்றியும் கவலைப்படாமல் துணிச்சலாகப் பேசக்கூடியவர் நம்முடைய சத்யராஜ் அவர்கள்.

சில நாட்களுக்கு முன்பு, இதே அரங்கத்தில் "திராவிடமே தமிழுக்கு அரண்" என்ற சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, அதில் சிறப்பான துணிச்சலான கருத்துகளை எல்லாம் எடுத்துப் பேசி இருக்கிறார் நம்முடைய சத்யராஜ் அவர்கள். அவருக்குத்தான் கலைஞர் விருது இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

நடிகர் சிவக்குமார் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கலைஞரின் வசனங்களைப் பேசி, தான் நடிக்க கற்றுக் கொண்டேன் என்பதைப் பற்றி அவரே குறிப்பிட்டு இருக்கிறார். அதனால்தான் இன்றைக்கு தான் நடிகராக மின்னிக் கொண்டிருப்பதாகவும், தான் நடிகனாக ஆனதற்குக் கலைஞர் என்ற ஆசிரியர்தான் காரணம் என்றும் அனைத்துக் கூட்டங்களிலும் பேசிக் கொண்டிருப்பவர் நம்முடைய சத்யராஜ் அவர்கள்.

அதேபோல, மக்கள் திலகம் எம்.ஜிஆரிடமும் மரியாதை வைத்திருப்பவர் நம்முடைய சத்யராஜ் அவர்கள். கலைஞர் மேல் தனக்கு இருக்கும் மரியாதையை மறைக்காதவர் என்பதுதான் அவருக்குள்ள பெருமை. அவருக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய பாராட்டுகளை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தமிழ் இசை வரலாற்றில் திருப்பாம்புரம் குடும்பத்தின் பங்கு!

'ராஜரத்னா விருதை'த் திருப்பாம்புரம் டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம் அவர்கள் பெற்றுள்ளார். திருப்பாம்புரம் இசைக் குடும்பத்தைச் சேர்ந்த அவர், தலைவர் கலைஞர் கையால் 'கலைமாமணி' விருது பெற்றவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் தமிழ்நாடு அரசவைக் கலைஞர் என்ற தகுதியைப் பெற்றவர். அவருக்குத்தான், இன்றைக்கு நான் 'ராஜரத்னா விருதை' வழங்கி இருக்கிறேன். தமிழ் இசை வரலாற்றில் திருப்பாம்புரம் குடும்பத்திற்காகவே பல பக்கங்களை ஒதுக்க வேண்டும். இப்படியான சிறப்புக்குரியவர் இந்த விருதைப் பெறுவது பெருமைக்குரியது.

### கழகத்தின் முழக்கமாகச் செயல்படும் ஆண்டாள் பிரியதர்ஷினி!

'இயல் செல்வம்' விருதை ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் பெற்றிருக்கிறார். 'பொதிகை' தொலைக்காட்சி மூலமாகப் பொதுவெளியில் அறிமுகம் ஆனாலும் இன்று எங்கள் கழகத்தின் முழக்கமாகச் செயல்படக்கூடியவர். கவிஞர் சிறுகதையாசிரியர் புதின எழுத்தாளர் கட்டுரையாளர் பேச்சாளர் – மொழிபெயர்ப்பாளர் என்று பன்முக ஆற்றல் கொண்டவர்.

'இசைச் செல்வம்' விருதை முனைவர் காயத்ரி கிரீஷ் அவர்கள் பெற்றிருக்கிறார். சுமார் 38 ஆண்டுகளாக இசை நிகழ்ச்சிகள் நடத்தி வரும் காயத்ரி கிரீஷ் அவர்கள், இசையில் அனைத்துத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திய சிறப்புக்குரியவர். தமிழ்ப் படைப்புகளை யூடியூப் சேனல்களில் கொண்டு வந்த வகையில் நம் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்.

'நாதஸ்வரச் செல்வம்' விருதைத் திருக்கடையூர் டி.எஸ்.எம்.உமாசங்கர் அவர்கள் பெற்றிருக்கிறார். கடந்த 20 ஆண்டுகளாக, நாதஸ்வர இசையுலகத்தில் வலம் வரும் உமாசங்கர், தன்னைப்போலவே பல திறமைசாலிகளை உருவாக்கிக்கொண்டு வருகிறார். அவர் துறைக்குப் பெரிய பங்களிப்பை இதன் மூலமாக அவர் செய்கிறார்.

'தவில் செல்வம்' விருதை சுவாமிமலை சி.குருநாதன் அவர்கள் பெற்றிருக்கிறார். ஹரித்துவாரமங்கலம் பழனிவேல், பெரும்பள்ளம் பி.பி.வெங்கடேசன் ஆகியோரிடம் தவில் பயின்று, இன்றைக்கு உலகம் முழுவதும் பயணித்துக் கொண்டு வருகிறார். அப்படி சென்ற பல நாடுகளில் விருதுகளும் பெற்ற பெருமைக்குரியவர் இவர்.

'கிராமியக்கலைச் செல்வம்' விருதை முனைவர் தி.சோமசுந்தரம் அவர்கள் பெற்றிருக்கிறார். தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையத்தின் இயக்குநர் –செயலாளரான சோமசுந்தரம் அவர்கள், கரகாட்டத்தின் வரலாற்றை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். சிலப்பதிகாரத்தில் ஆடல் கலை பற்றி முதுமுனைவர் ஆய்வில் ஈடுபட்டு இருக்கிறார். 'அழகர் ஆட்டம்' என்ற கலைவடிவத்தை உருவாக்கிய பெரும் கிராமியக் கலைஞர்.

### முத்தமிழறிஞர் கலைஞரே வழங்கும் விருது போன்றது!

'நாட்டியச் செல்வம்' விருதை திருமதி. பார்வதி ரவி கண்டசாலா அவர்கள் பெற்றிருக்கிறார். நாட்டிய உலகத்தில் தனக்கெனத் தனிப் பாணி மூலமாகத் தனிச்சிறப்பான இடத்தைப் பெற்றவர் பார்வதி அவர்கள். பாடகியாக இருந்து, பிறகு, நடனத்தில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, இப்போது அனைவர் கவனத்தையும் ஈர்ப்ப வராக இருக்கிறார்.

விருதுகள் பெற்ற அனைவருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, முத்தமிழ்ப் பேரவை வழங்கும் இந்த விருதானது, முத்தமிழறிஞர் கலைஞரே வழங்கும் விருது போன்றது! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! இன்னும் பல விருது களைப் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

### முத்தமிழாக வாழ்ந்தவர் தலைவர் கலைஞர்!

தலைவர் கலைஞரை ஏன் முத்தமிழறிஞர் என்று போற்றுகிறோம் என்றால், பேச்சாற்றல், எழுத்தாற்றல் என்று இயல் இசை நாடகம் என்ற மூன்று தமிழிலும் தன்னுடைய தமிழாற்றலால் முத்திரை பதித்தவர் அவர். அவரின் எழுத்தாற்றலுக்கு சிறு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டும் என்றால், "இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும். அதுவும் மானம் மானமென்றே ஒலிக்கும்!" என்று எழுதியவர் கலைஞர் அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் பேசினாலும் இசை நயம் இருக்கும். அவர் எழுதியதை வாசித்தாலே இசைபோல இருக்கும். தலைவர் கலைஞரின் 'மனோகரா' வசனம், எப்படி இசை வடிவமாக இருக்கிறது என்று என் மகள் செந்தாமரையின் நாட்டிய அரங்கேற்ற விழாவில் இசைஞானி இளையராஜா அவர்கள் பாடியே காண்பித்தார். பொதுக்கூட்ட மேடைகளில் தலைவர் கலைஞர் உணர்ச்சிகரமாகப் பேசுவதைப் பார்க்கும் போது நாடகத்தமிழை நேரில் பார்க்கலாம். இப்படி முத்தமிழாக வாழ்ந்தவர் தலைவர் கலைஞர்.

முத்தமிழுக்கு இலக்கணமாக விருது பெற்ற நீங்கள் அனைவரும், உங்களைப்போல பல திறமைசாலிகளை வளர்த்தெடுக்கவும் செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

### முத்தமிழ்ப் பேரவைக்கு நான் கூறும் பொன் விழாச் செய்தி!

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பது நம்முடைய முழக்கம்! அந்த வரிசையில் இசையிலும் தமிழ் ஒலிக்க வேண்டும், செழிக்க வேண்டும்! இடையில் சாதி, மதம் என்று அந்நிய மொழிகள் மூலமாகப் பல்வேறு பண்பாட்டுத் தாக்குதல் நடந்தாலும், அனைத்தையும் தாங்கி, தமிழும் தமிழினமும் தமிழ்நாடும் நின்று நிலைக்கத் தமிழின் வலிமையும், நம்முடைய பண்பாட்டின் சிறப்பும்தான் காரணம்! எந்த ஆதிக்கத்தையும் வெல்லும் ஆற்றல், மொழிக்கும் கலைக்கும் உண்டு! அந்த இரண்டையும் கண் போல காக்க வேண்டும்! இதைதான் முத்தமிழ்ப் பேரவைக்கு என் பொன்விழாச் செய்தியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக, தொய்வின்றி கலைப் பணியாற்றி வரும் முத்தமிழ்ப் பேரவையானது, ஐம்பதாம் ஆண்டு விழாவோடு நின்றுவிடாமல் நிச்சயம் நூற்றாண்டு விழாவையும் தொட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டு, பல்லாயிரம் ஆண்டுகளுக்குத் தனது கலைப்பணியைத் தொடர வேண்டும் என்று மனதார, நெஞ்சார என்னுடைய சார்பில் மட்டுமல்ல, நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் சார்பிலும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.